# <u>தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்</u>

**கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை**

பத்திரிக்கைச் செய்தி

நாள்.03.08.2026

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறையில் 2026-2027ஆம் கல்வியாண்டில் இளங்கல்வியியல்(B.Ed) மற்றும் கல்வியியல் நிறைஞர்(M.Ed) பயிலும் மாணவர்களுக்கான உடனடிச் சேர்க்கை 31.07.2026ஆம் நாளுடன் நிறைவடைவதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்போது, இச்சேர்க்கையானது 31.08.2026 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்பெறுகிறது.

மேலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இளங்கல்வியியல் பட்டம்(B.Ed) மற்றும் கல்வியியல் நிறைஞர் பட்ட(M.Ed) வகுப்புகள் தமிழ் வழியில் பயிற்றுவிப்பதோடு, ஆசிரியர் தகுதித் தேர்வு பயிற்சி, வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் பயிற்சி ஆகிய சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்படுகிறது. இங்குப் பயிலும் மாணவர்களுக்குப் பருவத் தேர்வுகள் உரிய தேதிகளில் நடத்தி, தேர்வு முடிவுகள் விரைந்து வெளியிடப்பெறும் என்றும் இவ்வாறு செய்வதால் படிப்பு முடித்த மாணவர்கள் அதே, கல்வியாண்டில் வேலைக்குச் செல்லும் வாய்ப்பு உருவாக்கித் தரப்பெறுகிறது என்பதையும் பதிவாளர்(பொ) தெரிவித்தார்.

பதிவாளர்(பொ)